# JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU

## S.T.C.No. 253/2024

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Pw1 |
| Name | : Manogaran |
| Father/Husband's Name | : Vaithiyalingam |
| Taluk | : Potheri |
| Calling | : |
| Age | : 65 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16.04.2026.

**குறுக்கு விசாரணை**

1. நான் 8 ம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். எனது சொந்த ஊர் சேலம் மாவட்டம் அம்மாம்பேட்டை என்றால் சரிதான். நான் புகாரில் சொல்லப்பட்டுள்ள முகவரியில் 15 வருடங்களாக வசித்து வருகிறேன். நான் SRM கல்லூரியில் கேண்டின் வைத்து நடத்தி வருகிறேன். அதற்கு எனது பெயரில் தான் காண்டிராக்ட் எடுத்துள்ளேன். எனக்கு இதன் மூலமாக மாத வருமானம் ரூ.50,000/- இருக்கும். இதை தவிர வேற வருமானம் இருக்கிறதா என்றால் நிலம் இருந்தது அதை விற்றுவிட்டேன். எனக்கு 3 மகள்கள் மற்றும் 1 மகன் இருக்கிறார்கள். எனது மகளின்

கணவர் தான் இந்த வழக்கின் வழக்கறிஞர் K.R.Balaji. எதிரிக்கும் எனக்கும் பாலாஜி மூலமாகதான் பழக்கம் ஏற்பட்டது என்றால் சரிதான். பாலாஜிக்கும் எதிரிக்கும் எவ்வளவு நாட்களாக பழக்கவழக்கம் என்றால் எனக்கு தெரியாது. பாலாஜி என்பவரின் சொந்த ஊர் சேலம் மாவட்டம் வாழப்பாடி. எதிரியும் அதே பகுதியை சேர்ந்தவர் என்றால் சரிதான்.

2. அவர்கள் இருவரும் சேர்ந்து பாக்கு கொட்டை வியாபாரம் செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் எதிரி செய்தது எனக்கு தெரியும் பாலாஜி செய்தது எனக்கு தெரியாது. அவர்கள் கூட்டாக தொழில் செய்த விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. எதிரியும் பாலாஜியும் Goodway finance என்ற நிறுவனத்தில் பங்கு தாரர்களாக இருந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அவ்வாறு அவர்கள் இருந்தார்கள் என்றாலும் 2019 ல் இருந்து பாலாஜிக்கும் எதிரிக்கும் எந்த பேச்சு வார்த்தை இல்லை என்றாலும் அதை பற்றி எனக்கு தெரியாது. பாலாஜி என்பவர் STC No.2865/2025 என்ற காசோலை வழக்கை JM-3 சேலம் நீதிமன்றத்தில் எதிரிக்கு எதிராக தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கு

தாக்கல் செய்துள்ள பிறகுதான் அந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

3. புகாரிலும் பிரமாண வாக்குமூலத்திலும், வழக்கறிஞர் அறிவிப்பிலும் எதிரி எனக்கு எத்தனை நாட்களாக தெரியும் என்ற விவரத்தை சொல்லி இருக்கிறேனா என்றால் இல்லை. எனக்கு 3 வங்கி கணக்குகள் உள்ளது. எனக்கு எவ்வாறு வருமானம் வருகிறது என்று ஏதேனும் ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் செய்திருக்கிறேன். எதிரியை எனக்கு ஐந்து ஆறு வருடங்களாக தெரியும். எதிரி பாக்கு வியாபாரம், சீட்டு தொழில் மற்றும் Finance நடத்தி வந்தார். எதிரியின் குடும்ப உறுப்பினர்கள் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. 07.10.2023 ம் தேதி எதிரி என்னிடம் பொத்தேரியில் என் வீட்டில் வைத்து ரூ.10,00,000/- பணம் கேட்டார். பணம் கேட்ட போதே நான் கொடுத்துவிட்டேன் என்றால் சரிதான். அப்போது என்னுடன் எனது மனைவி இருந்தார்.

4. அதற்கு முன்பு எதிரி என்னிடம் பணம் கேட்டதில்லை என்றால் சரிதான். எதிரியால் அந்த தொகையை திருப்பி தர முடியுமா என்றால் அவருக்கு திருப்பி தரக்கூடிய அளவுக்கு பணம் இருக்கிறது. இதற்குமுன்பு

நான் வரவு செலவு செய்திருக்கிறேனா என்றால் இல்லை. இந்த பணத்திற்கு யாராவது நபர்கள் ஜாமீனாக இருந்தார்களா என்றால் இல்லை. இந்த வழக்கு கா சோலையை தவிர எதிரியிடம் இருந்து எந்த ஆவணமும் பெறவில்லை என்றால் சரிதான். நான் ஏற்கனவே கையில் ரொக்கமாக ரூ.5,00,000/– வைத்திருந்தேன். சீட்டு போட்டு வந்த பணத்தையும் ரூ.5,00,000/– வைத்திருந்தேன்.

5. எதிரி கேட்டவுடன் ரூ.10,00,000/– கொடுத்துவிட்டேன். அதற்கான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ரூ.20,000/–க்கு மேல் வங்கி மூலமாக தான் பணம் கொடுக்க வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். ரூ.10,00,000/– ரொக்கமாக கொடுத்ததாக சொல்லப்படும் விவரம் நம்ப கூடியதாக இல்லை என்றால் சரியல்ல. எத்தனை ரூபாய் நோட்டுகளாக கொடுத்தேன் என்ற விவரம் சொல்ல முடியாது என்றால் சரிதான். நான் வட்டிக்காக அந்த பணம் கொடுத்தேனா என்றால் இல்லை. ரூ.10,00,000/– வட்டிக்கு இல்லாமல் கைமாற்று பணமாக கொடுத்ததாக சொல்லப்படும் விவரம் ஏற்புடையதாக இல்லை என்றால் சரியல்ல.

6. எனக்கு பான் கார்டு உள்ளதா என்றால் இல்லை. நான் காண்டிராக்ட் எடுத்து தொழில் செய்வதால் பான் கார்டு இல்லை என்று சொல்வது வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வரவு செலவு புத்தகத்தில் எதிரிக்கு பணம் கொடுத்ததை குறிப்பு வைத்திருக்கிறேனா என்றால் இல்லை. எனக்கு லட்ச கணக்கில் வருமானம் வருவதற்கு எந்த வழியும் இல்லை என்றாலும் அவ்வாறு எதிரிக்கு பணம் கொடுத்ததற்கு பணத்தகுதி இல்லை என்றாலும் சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

Typewritten to my dictation in open
court read over to the witness in Tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.

Sd/-S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu.